III.—ELECTION OF DEPUTY SPEAKER.

MR. SPEAKER : சபையின் அடுத்த அலுவல், 'உதவி சபா நாயகர் தேர்தல்' ஆகும். உதவி சபாநாயகர் பதவிக்கான அபேட்சகர் விண்ணப்பங்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு விட்டன. சட்டசபை விதிகளின் 13 (4) விதியின்படி, உதவி சபா நாயகர் பதவிக்குப் பிரேரேபிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களையும், அவர்களைப் பிரேரேபித்தவர்கள், ஆமோதித்தவர்கள் ஆகியவர்களின் பெயர்களையும் நான் முதலில் இந்த அவைக்கு அறிவித்தாக வேண்டும். அவை பின்வருமாறு :

வரிசை எண்.	பிரேரேபிக்கப்பட்டவர்.	பிரேரேபித்தவர்.	ஆமோதித்தவர்.
1.	திரு. கே. பார்த்த சாரதி.	திரு. எம். பக்தவத்சலம்.	திரு. பி. கக்கன்.
2.	திரு. கே. பார்த்த சாரதி.	திரு. கே. டி. கோசல ராம்.	திரு. எம். எஸ். செல்வராஜன்.
3.	திரு. கே. பார்த்த சாரதி.	திரு. கே. எஸ். அப்துல் அஜீஸ்.	திரு. எஸ். சிவ சுப்பிரமணியன்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், நான் திரு. கே. பார்த்தசாரதி அவர்கள் இந்தச் சபையின் உதவி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கின்றேன். (ஆரவாரம்.)

திரு. கே. பார்த்தசாரதி அவர்கள் என்னுடன் 1953-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை இந்தச் சபையில் அங்கத்தினராக இருந்து பணி புரிந்தவர்; சட்டம் பயின்று, வழக்கறிஞராகவும் தொழில் புரிந்தவர். அவர்களும், உங்களுடைய ஒத்துழைப்புடன், நல்ல முறையில் அவருடைய கடமையைச் செய்வார்கள். உதவி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவரை நான் பாராட்டுகின்றேன்.

IV.—FELICITATIONS TO SPEAKER AND DEPUTY SPEAKER.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று மகத்தான ஒரு பொறுப்பை இந்த மன்றம் தங்களுக்கு அளித்திருக்கிறது. தாங்கள் இந்த மன்றத்தின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். அதுவும், தாங்கள் போட்டியின்றி ஏகமனதாகவே இந்த மன்றத்தின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றீர்கள் என்பது எங்கள் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. அதற்காக நான் தங்களைப் பாராட்டுவதற்கு முன், எதிர்க் கட்சியினரைப் பாராட்ட வேண்டும். ஜனநாயக முறையில் நடைபெறுகின்ற தேர்தலில் போட்டி கூடாது என்று யாரும் வற்புறுத்துவது முறை அல்ல. அவ்வாறே, ஜனநாயக முறையில் நடைபெறுகின்ற தேர்தல்களில் சிறுபான்மையோர் வேண்டுவதையே பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதோ, எதிர்பார்ப்பதோ அதுவும் ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள